"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி – ஆவணி – புரட்டாசி 2004



மங்களபதி ஸ்ரீ வேல் முருகன் - லூயிஷம்

லண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

# GLOBAL Estates

Making your way into property.......

We specialise in Selling / Letting properties, and have proved our services by selling properties around Tooting, Mitcham, Collierswood, Morden, Wimbledon, Streatham

We urgently require two to four bedproperties around your area for seriousbuyers registered with us.

**Our charges are only 1.0% + VAT**
**on No Sale No Fee Basis**

**Why not call us NOW for**
**IMMEDIATE RESULTS and a FREE VALUATION**

Call us on

**020 8682 5100**

**239 Mitcham Road, Tooting SW17 9JG**

# Financial Services Ltd

*Total, Trusted, Mortgage Solutions...*

**Are you having problems in getting a Mortgage?**

* Can't get the right Mortgage? * No Bank statements?
* No Proof of Income * Difficult credit history?
(CCJ's, Defaults, Mortgage Arrears,...)
* Selfemployed no accounts * Need to raise funds for business?
* Trying to bring all your financial commitments under one payment?

**Whatever the problem, One call to**
**GL Financial Services**
**will heal your financial headache**

**We specialise in arranging**

* Mortgage for 1st Time Buyers * Buy - to - Let Mortgages * Let - to - Buy Mortgages
* Remortagages * Right to buy Mortgages * Commercial Mortgages * Commercial Loans

Life Assurance, Building & Contents Insurance

**239 Mitcham Road, Tooting, SW17 9JQ**

**tel : 020 8682 5100**

*Your home is at risk if you do not keep up repayments on mortgages or other loans secured on it*

மணி 12

# கலசம்
KALASAM

ஒலி 47

www.smsuk.org.uk E-mail: kalasamsms@yahoo.co.uk

## ஞான வழி.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலகட்டத்தில் அதன் பக்கவிளைவாக வளர்ந்து கொண்டிருப்பது அஞ்ஞானம். அதாவது புலன் இன்பங்களுக்கு மனிதன் கொடுக்கும் முக்கியத்துவம். விஞ்ஞானம் எமது வசதி–களைக் கூட்ட, அதனால் தேவைகளையும் ஆசைகளையும் நாம் கூட்ட, அவற்றைத் தேடுவதிலேயே எமது வாழ்க்கை தேய்ந்து விடுகிறது. கணிபொறியும், கைத்தொலைபேசியும் இல்லாமல் சிறுவர்களால் கூட இப்போது வாழமுடியாது. இந்த நிலையில் எமது அவசரத் தேவை மெய்ஞ்ஞானமாகும்.

இன்றைய இளைய சமுதாயத்தினர் எமது சமய, மற்றும் பாரம்பரிய சடங்குகளை எதிர் கொள்ளும் போது ஏன் என்ற கேள்வியை எழுப்புகின்றார்கள். இக்கேள்விகளுக்குச் சரியான பதில்கள் கிடைக்காவிட்டால் அவர்களுக்கு மிஞ்சப்போவது ஏமாற்றமே. இது சமய வழிபாடுகளிலும் இறை நம்பிக்கையிலும் அவர்களுக்குள்ள ஈடுபாட்டைக் குறைத்து, செயற்கைத்தனமாக்குகின்றது. அது மட்டுமன்றி சமயத்தை அவர்கள் பார்வையில் ஏளனப்படுத்துகிறது.

சைவ சமயம் அர்த்தமுள்ளதாக நிலைத்திருப்பதற்கு இக் கேள்விகளுக்குப் பதிலளிப்பது எமது கடமையாகும். ஏன் என்ற கேள்வி எமது சமயத்திற்கு ஒவ்வாதது அல்ல. அது இன்றியமையாததாகும். இதற்கான பதில்களையே வேதத்தில் ஞானகாண்டமும், ஆகமத்தில் ஞான மார்க்கமும் சொல்கின்றன. சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று நெறிகளும் ஞானபாத உண்மைகளை அனுபவபூர்வமாக உணர்த்துவதற்கு அமைந்தவையே. ஆனால் நாம் சரியைக்கும், கிரியைக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் யோகத்துக்கும் ஞானத்திற்கும் கொடுப்பதில்லை. இதனாற்றான் பெரும்பாலான சிவாகமங்களின் ஞான பாதம் இன்று கிடைக்கப்பெறவில்லை. விளக்கமில்லாமல் செய்யப்படும் கிரியைகள் வியாபாரத்தனமாக மாறிவிடுகின்றன.

இந்த நிலை மேலும் வளராமல் தடுக்க, சைவ சமயிகள் எல்லோரும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக மந்திரங்கள் சமஸ்கிருதத்தில் தான் இருக்கவேண்டுமென்றால் அவற்றின் தமிழ், ஆங்கில மொழி–பெயர்ப்புகள் விரும்புவோருக்கு கொடுக்கப்படலாம். தேவார வகுப்புக்களில் அவற்றின் கருத்துக்களும் சொல்லித்தரப்படவேண்டும். கிரியைகளுக்கு வேதங்களையும், ஆகமங்களையும் ஆதாரமாகக்கொண்ட விளக்கங்கள் பிரசுரிக்கப்படவேண்டும். இவை மெய்யறிவுக்கு முதற்படியாக அமையும். எளிமையான தமிழ், ஆங்கில சொற்பொழிவுகள் மூலம் சைவ சித்தாந்த உண்மைகள் தக்கவர்களால் விளக்கப்படவேண்டும். இந்த வகையில் இலண்டன் சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் வருடந்தோறும் நிகழ்த்தும் சைவ மாநாடு மிகவும் மெச்சத்தக்கதாகும்.

இந்த வகையில் சைவ முன்னேற்றச் சங்கம் கலசம் இதழைப் பிரசுரிப்பதுடன் வாரந்தோறும் ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகளையும் பெரியோர், சிறியோருக்கான சமய,வகுப்புக்கள் ஆங்கிலத்திலும் நிகழ்த்திவருகின்றது.

5000 வருடங்களுக்கு மேல் பழமைவாய்ந்த எமது சமயம் இன்னும் பலகாலம் இந்நாட்டில் நிலைத்திருப்பதற்கும், மூடத்தனங்கள் வளராமல் களையப்படுவதற்கும் இது போன்ற செயற்பாடுகள் மூலம் ஞான வழியை மறவாதிருத்தல் அவசியமாகும்.

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ..தர்மலிங்கம், திரு. ம. ஜெயசீலன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

லூயிசாமில் எழுந்தருளி இருக்கும் மங்களபதி ஸ்ரீ வேல்முருகன் இந்த ஆண்டும் 31-07-2004 சனிக்கிழமை வருடாந்த ஆடிவேல் பவனிப் பெருவிழா அன்று வீதி வலம் வருகிறார். இது குறித்து இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

## பாமாலை



முருகா நீ தேரில் பவனி வர
உருகாத என் மனமும் உருகிவிட
மால் மருகா நான் அழுதேன் இன்று
என் சோகங்களை நீக்கிய என் தெய்வமே
என்றும் துணை நீயே எழில் மிகு குமரனே
தமிழைத் தந்திடும் தமிழ்க்குமரா
தனயன் எனைக் காத்திட வேண்டும்
தமிழர் துயர் துடைக்கும் தெய்வமே
காத்திருப்பேன் அருள் மழைக்கு
கருணைமிகு கந்தனே என் கடவுளே

கவிதை ஆக்கம்-கனக ஈஸ்வரகுமார்

# முருக வழிபாடு

**க.சிவகுருநாதபிள்ளை**

ஓம் என்ற எழுத்தை அறியாதவர்கள் நமது இந்து சமயத்தில் இல்லை. எந்த ஒரு மந்திரத்தின் முன்னும் ஓம் என்ற சொல் சேர்க்கப்பட்டிருப்பதையும் நாம் அறிவோம். அந்த ஓம் என்ற ஒலியில் எவ்வளவு சக்தி உண்டு என்பதை நாம் அது ஒலிக்கும் போது உணரலாம். ஒலி இன்றி உலகம் இல்லை. அந்த ஒலியை சமநிலைப் படுத்தி சம மனநிலையை உண்டாக்குவதே வழிபாடுகளின் நோக்கம் ஆகும். எப்போது நாம் நமது சமநிலையில் இருந்து நிலை மாறுகிறோமோ அப்பொது நாம் தவறு செய்ய ஆரம்பிக்கிறோம். இதற்கெல்லாம் எமது சமயத்தில் பல வரலாறுகள் அவ்வப்போதைய மக்களின் விளக்கத்திற்கு ஏற்பக் கதைகளாகக் கூறப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருகின்றன.

இந்த ஓம் என்ற பிரணவம் பற்றி பல புராணங்கள் எடுத்துக் கூறுகின்றன. இந்த வரிசையில் முருகனுக்காக அவரது திருவிளையாடல் பற்றி எழுதப்பட்டது தான் கந்தபுராணம். கந்தபுராணத்தில் உள்ள அத்தனையும் இன்றைய மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதது. பொதுவாகப் பல கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ளலாம். காலகாலமாக கந்தபுராணம் கற்று வழிவந்த பெரியார்கள் அனைவரும் தத்தமது அறிவிற்கு ஏற்ப விளக்கங்களையயும் அந்த அந்தக் காலத்து மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய நடைமுறையிலும் எழுதி வந்தனர்.

எமது கடவுள்கள் எமது குடும்பம் போல இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. அத்தோடு இந்து சமயத்தில் கடவுள் கவலைப்பட்டு அழுத குழந்தைக்குத் தன் மனைவியுடன் வந்து பால் கொடுத்ததையும், மிருகமாக வந்து பசியால் வாடிய அழுக்குப் பன்றிக் குட்டிகளுக்குப் பால் ஊட்டியதையும் நாம் புராண கதைகளில் படிக்கிறோம். சம்பவம் நடந்திருக்கலாம் நடக்காமல் இருந்திருக்கலாம். அது வெறும் ஆராய்ச்சி. இப் புராணக்கதையில் இருந்து மக்களுக்கு

எடுத்துரைக்கும் உண்மையை நாம் எல்லோரும் அறியக் கூடியதாக உள்ளது. சேவை செய். சேவை மனப்பாங்கை மனத்தில் வளர்த்துக்கொள் என்பதே அது.
காலத்துக்குக் காலம் இறைவன் பல உருவங்களில் தோன்றுகிறான். முருகப்பெருமான் ஏன் உதித்தார் என்ற கேள்வியைப் பார்ப்போம். கெட்ட செயல்களைச் செய்கிறவர்களை அழிக்க வேண்டும். ஓம் என்ற ஒலி ஏனைய ஒலிகளை அடங்கச் செய்கிது. இதை நாம் பிரார்த்தனை மண்டபங்களில் கேட்கக் கூடியதாக இருக்கிறது. கெட்ட குணங்கள் நமக்குள்ளேயே இருக்கிறது. நான் என்னும் அகங்காரம். தன்னலம் – தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்கின்ற குறுகிய மனப்பான்மை. கோபம்– மற்றவரைத் திட்டுதல், பேராசை– திருப்தி அற்ற மனப்பான்மை. இவற்றை இல்லாமல் செய்வதன் மூலம் மனிதன் மனிதனாக வாழலாம். மற்றவர்களுக்கும் அவன் பிரயோசனமாக இருப்பான். இந்த கெட்ட குணங்கள் அனைத்தும் சூரபன்மனிடம் இருந்தன. சூரபன்மன் அன்றும் இருந்தான், இன்றும் இருக்கிறான், இனிமேலும் இருப்பான். மக்கள் இருக்கும் வரை சூரபன்மன் போன்றவர்களும் தோன்றி மறைந்து வாழ்வு சுழற்சியில் வந்து போவார்கள். அன்று காக்கை வன்னியன் போன்றவன் இருந்து அன்னியனுக்கு தனது இனத்தவனைக் காட்டிக் கொடுத்தான். அதே போன்று இன்றும் அவன் போன்ற குணத்தை உடையவர்கள் எல்லா சமூகத்திலும் இருக்கிறார்கள் என்பதை தற்கால நடைமுறையில் நாம் காணக் கூடியதாக உள்ளது. ஓம் என்ற ஓலி இந்த கெட்ட குணங்களைப் போக்க வல்லது.
அதனாலே முருகன் பிரணவ உருவம் கொண்டவன் என்பதை நாம் அறிவோம்.

இந்தப் பிரணவத்தின் பொருளை முருகன் சிவனுக்கு எடுத்துரைத்தார் என்பது வரலாறு. இதனால்தான் முருகனுக்கு சிவ குரு நாதன் – எல்லாம் வல்ல சிவனுக்கு ஆசிரியராக வந்தவன் என்பது பொருள். அறிவைப் பெறுவதற்கு வயது வித்தியாசம் இல்லை. குழந்தைகளிடத்தில் நிறையப் பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். இக் கருத்தை அன்றைய மக்கள் அறிந்துணரும் வகையில் சிவன் முருகன் என்ற பெயர்களைச் சூடி அம்மக்கள் விளங்கக் கூடிய வகையில் கூறப்பட்டது. இன்று இக்கருத்து இன்றைய சூழலுக்கு ஏற்ப மின் இதழில் ஒலிஒளிப்பேழையில் பள்ளிகளில் உங்கள் குழந்தைகள் கூறுவதைக் கேளுங்கள் என்று பெற்றொருக்குப் புகட்டுகிறார்கள். கந்தபுராணத்தில் கூறப்பட்ட கதைகள் எல்லாம் அன்று நடந்த கதை அல்ல. இன்று நடக்கும் கதை. பிரணவத்தின் பொருள் கேட்க தன் மகன் முருகப்பெருமானை மேலே அமர்த்தி தான் கீழே அமர்ந்து கேட்டார் சிவபெருமான். இது குரு சிஷ்ய முறையை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

சூரனை அழிப்பது கந்த புராணத்தின் முக்கிய பாத்திரம். சூரன் யார்? கெட்ட குணங்களைக் கொண்ட அரக்கன். எம்மிடையே இருக்கும் இந்த அரக்க குணத்தை ஓம் என்ற பிரணவத்தால் அழிக்க வேண்டும். அதற்காகவே நாம் ஆலயம் செல்கிறோம். ஆலயத்தில் உள்ள அழகிய உருவத்தை மனத்தில் நினைத்து எமது கெட்ட குணங்களை அகற்றுகிறோம்.

மாம்பழம் கிடைக்காததால் கோபம் அடைந்த முருகன் பழநி சென்றதாக புராண வரலாறு. அவர் பழநி போன கோலத்தைப் பார்த்தால் ஒரு துண்டுடன் இருப்பதைக் காணலாம். வாழ்க்கையில் எல்லாவற்றையும் துறந்து சந்நியாசியாக இருக்கும் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. பழத்தில் கூட ஒரு ஞானிக்குப் பற்று இருக்கக் கூடாது. துறவற வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை எடுத்து மக்களுக்குக் காட்டுகிறார் முருகன். அத்தோடு பெற்றோரை வலம் வந்த பிள்ளையாருக்கு மாம்பழம் கிடைக்கிறது. தாய் தந்தையர் தான் உலகம் என்னும் கருத்தை மக்கள் புரியும் வகையில் அமைத்தது இந்த வரலாறு. சம்பவம் உண்மை அல்லது பொய் ஆக இருக்கலாம். இது அல்ல தற்போதைய ஆய்வு. நடைபெற்ற சம்பவத்தின் தத்துவம் என்ன என்பதே ஆகும்.

மேலும் முருகன் கலப்புத் திருமணம் சமூகத்தில் ஏற்கப்பட வேண்டும் என்ற உண்மையை மக்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக வேட்டுவப் பெண் வள்ளியைத் திருமணம் செய்கிறார்.

41ம் பக்கம் பார்க்க ...

# அருணகிரிநாதர் உணர்த்தும் தெய்வ உணர்வு கலந்த அற உணர்வு

**க.கனகரத்தினம்**

முருகப்பெருமான் அருள் பெற்ற அடியார்களுள் தலையாயவர்அருணகிரிநாதர். முருகப்பெருமான் அருட்காட்சியைப் பெற்றவர். அவரிடம் சும்மாஇரு சொல்லற எனும் ஞான உபதேசம் பெற்றவர். பெருமான் அருளால் அவர்சீர் பல பாடினார். அவை பொருள் பொதிந்த அருள் செறிந்த பாடல்களாக சந்தத்திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல், மயில், சேவல் விருத்தங்களாக அவர் வாய் வழி வந்த நிறைமொழிகளாக விளங்குகின்றன. அவை பாடிப் பரவுவார் நெஞ்சங்களில் தெய்வ உணர்வையும், தெய்வ உணர்வுகலந்த அற உணர்வையும் வளர்க்கின்றன. வையத்து வாழ்வாங்கு வாழும் நெறி பலவும் காட்டுகின்றன.

பாடல் முகமாக நாலு நெறிகள் நவில்கின்றார். அவை **தடுங்கோள் மனத்தை, விடுங்கோள் வெகுளியை, தானமென்றும் இடுங்கோள், இருந்தபடி இருங்கோள்** என்ற நன்னெறி நாலுமாம். இந்த நாலு நெறிகள் வழியில் வாழ்ந்தால் **வைவேல் விடுங்கோனருள்** வந்து தானே உமக்கு வெளிப்படும் என முருகன் அருள்பெறும் வாய்ப்பினையும் சொல்லி ஆற்றுப்படுத்துவது போற்றற்குரியது. பாடலை முழுமையாகப் பாடிப் பரவுவோம்.

**தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை தானம் என்றும்**
**இடுங்கோள் இருந்தபடி இருங்கோள் எழு பாருமுய்யக்**
**கொடுங் கோபச் சூருடன்குன்றந் திறக்கத் தொளைக்க வைவேல்**
**விடுங்கோன் அருள் வந்து தானே உமக்கு வெளிப்படுமே**

(க.அலங்காரம்)

## தடுங்கோள் மனத்தை

இவ்வாறு காட்டும் நெறிகளைக் கொண்டொழுகுவது சுலபமான காரியமா? மனம், பொறி, புலன்கள் வழிச் சென்று ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கும் அல்லது சலித்துக்கொண்டிருக்கும் மனத்துள் விளையும் ஆசை பிறவிக்கு வித்தாக அமைகிறது. வள்ளுவனாரும்,

***அவா என்ப எல்லா உயிருக்கும் எஞ்ஞான்றும் தவாப் பிறப்பினும் வித்து***

என மக்கள் சமூகத்தின் விடுதலை நோக்கி உரைத்திருப்பது நோக்கத்தக்கது. பிறவித்துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு ஆசையாகிய கடலில் இருந்து கரை ஏறவேண்டும். இது கைகூடுவதற்கு மனத்தை அடக்க வேண்டும். மனம் ஒடுங்கும் நெறிகளில் மனத்தைச் செலுத்த வேண்டும். அந்நெறிகளாகிய வழிபாடு பூசை, தியானம், யோகம் ஆகியவற்றில் மனத்தை வழிப்படுத்த வேண்டும். வழிப்படுத்தும் போது இறை அருளால் மனத்தில் எழுகின்ற ஆசை அழியும். மனவேகம் கெடும். வேகங்கெடுத்தாளும் வேந்தனல்லவா இறைவன்? மனவேகம் கெட மனத்தில் சலனமற்ற நிலை தோன்றும். சலனமற்ற நீரில் சூரிய, சந்திர விம்பக் காட்சி தெளிவாகத் தோன்றுவது போல மனத்தில் இறைக்காட்சி தோன்றும். அருணகிரியார் சொன்னது போல வேலோன் அருள் வந்து தானே வெளிப்படும்.

## விடுங்கோள் வெகுளியை

மனத்தைத் தடுக்கும் ஆற்றல் படைத்த முனிவரையும் வெகுளிவிட்டதில்லை. துருவாச

முனிவருக்கு வந்தகோபம் சகுந்தலையின் வாழ்வைக் கலங்க வைத்தது. வெகுளியினால் விசுவாமித்திரர் தவத்தையும் நலத்தையும் இழந்தார். எவ்வகையிலும் வெகுளி கொடியதால் விடுங்கோள் வெகுளியை என உரைத்தார்.

***தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்***
***தன்னையே கொல்லுஞ் சினம்***

என கோபத்தின் கொடுமையைக் கூறி தன்னைக் காத்துக்கொள்ள (சினத்தை) கோபத்தை விடவேண்டும் என உரைப்பதைப் படிக்கின்றோம். கோபத்தை விடுமாறு சொல்லிய அருணகிரிநாதர் கோபத்தை விடும் வழியையும் சொல்லியிருக்கிறார். பிறிதோரிடத்தில்

**பொறையாமறிவால் அரிவாய் அடியோடு**
**மகந்தையையே .........** எனக் கூறியிருக்கிறார். பொறுமையை ஆயுதமாகக் கொண்டால் கோபம் அடங்கும். அதனால் மனநலம், உடல்நலம், உயிர்நலம் வளரப்பெறும்.

## தானமென்றும் இடுங்கோள்

இதுவரை சொல்லிய மனமடங்கலும் சினமடங்கலும் தன்னலமாகும். தன்னலத்தோடு பிறர் நலமும் பேணப்படவேணு மென்பதால் தானமென்றும் இடுங்கோள் என்றார். அவர்மேலும் பல பாடல்களில் வறிஞர்க்கென்றும் கொடுங்கள், நொய்யிற் பிளவள வேனுங் கொடுங்கள், ஏற்பவற்கு இடுங்கள், உள்ளபோதே கொடுங்கள் என நெஞ்சங்களைத் தட்டித் தட்டிச் சொல்வதிலிருந்து அவர் தானமிடுதலை உயர்ந்த தருமமாக கருதினார் என்பதை அறிகிறோம். எனவே அவர் காட்டிய வழியில், ஒல்லும் வகையில் செல்வோம். திருவள்ளுவனார் சொல்லிய

***ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே***
***செல்லும் வாய் எல்லாம் செயல்***

என்னும் வாய் மொழியைச் சிந்தையிற் கொள்வோம்.

## இருந்தபடி இருங்கோள்

இவையெல்லாங்கடந்து இருந்தபடி இருங்கோள் என ஒருபெருநிலையையும் கொண்டு ஒழுகுமாறு சொல்லியிருக்கிறார். இதில் மனத்தைத் தடுத்தும் வெகுளியை விடுத்தும் தானமிட்டும் இருத்தலாகிய தளராத நிலை ஒன்று. இறையோடு ஒன்றிஇருத்தலாகிய பெருநிலை மற்றொன்று. ஒன்றியிருத்தல் என்பது இறை சிந்தனையோடிருத்தல். அவர்கூறிய நாலு நெறிகளிலும் ஒழுகப் பெற்றால் எந்தை முருக வேளின் அருள் தேடிவரும். பெருவாழ்வும் பேறும் கிடைக்கும். இது அவர் நமக்குக் காட்டும் அருள்வழி.

மேலும் அறவினை செய்யும் போது அருள் வழி நின்று இறைஉணர்வோடு செய்யுங்கள். செய்யும் பயன் இறை அருள்போல எங்காயினும் வந்து உதவும் என, பின்வரும் அவர் பாடலில் அருளியிருப்பதைக் காண்போம்.

**பொங்கர வேலையில் வேலைவிட்டோனருள்**
**போலுதவ**
**எங்காயினும் வரும் ஏற்பவர்க்கிட்ட**
**திடாமல்வைத்த**
**வங்காரமுமுங்கள் சிங்காரவீடும் மடந்தையரும்**
**சங்காதமோ கெடுவீருயிர் போமத் தனிவழிக்கே**
(கந்தர் அலங்காரம்)

இப்பாடலில் இரப்பவர்க்குக் கொடாமல் வைத்திருக்கும் செல்வமும், மற்றும் மதிக்கப்படும் அழகிய வீடும், பெண்களும், உயிர்போகும் வழிக்குத் துணையாகா. எது துணையாகுமெனில் ஏற்பவர்க்கிட்டது. அது முருகன் அருள்போல எவ்விடத்திலாயினும் வந்து துணைபுரியும் எனப் படிப்பவர் மனத்தில் அருள்நாட்டத்தையும் அறநாட்டத்தையும் அருணைவள்ளல் ஊக்குவிப்பதைப் பார்க்கின்றோம். மேலும் வறியார்க்கொன்று ஈதலே ஈகை எனும் வாக்கினுக்கமைவாக

**வையிற் கதிர்வடிவேலோனை வாழ்த்தி**
**வறிஞர்க்கென்றும்**
**நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள்**
**நுங்கட்கிங்கன்**

**வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல் போல்**
**கையிற் பொருளும் உதவாது காணும் கடைவழிக்கே**
(கந்தர்அலங்காரம்)

என வறியார்க் கொன்றீவதை பெரிதாகக் கூறியிருக்கிறார். இப்பாடலில். தானும் அனுபவிக்காது ஈதலும் செய்யாது கையில் வைத்திருக்கும் பொருட்செல்வம் வெய்யிற் கொதுங்க உதவா உடம்பின் வெறுநிழல் போல உயிர்போகும் தனிவழிக்குத் துணையாக வரா. அதனால் வடிவேலோனை வாழ்த்தி அவன் சிந்தனையுடன் கையிலிருக்கும் பொருளில் சிறிதளவையாவது வறியார்க்குப் பகிர்ந்துகொடுங்கள் அது உங்கள் மரண வழிக்கு உதவும் என ஈயாத நெஞ்சங்களுக்கு அழுத்தி உரைப்பதைப் பார்க்கின்றோம். தானங்களில் வறியார் பசிபோக்கும் தானத்தையே பெரிதாகக் கருதினார் அருணகிரியார் என்பது புலனாகின்றது. தெய்வப்புலவரும்

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி**

என பொருளைச் சேமித்து வைக்குமிடம், வறியார் பசி போக்கும் இடமெனக் காட்டுவதைப் பார்க்கின்றோம். அருணகிரியார் பாடலில் வேலோனை வாழ்ந்துங்கள், வறிஞர்க்கென்றும் பகிர்மின்கள் என அவர் கூறியிருப்பவை சிந்தனையில் கொள்ள வேண்டியவையாகும். வேலோனை வாழ்த்துவதால் நான் என்னும் தன் முனைப்பு அழிகின்றது. யாவும் அவன் செயல் என்னும் உணர்வு தோன்றுகிறது. அதனால் செய்யும் செயலால் விளையும் ஆகாமியவினை இல்லாதொழிகின்றது. இதன் விளக்கத்தை

**அவ்வினைக்கிவ் வினையாமென்று சொல்லுமஃதறிவீர்**
**உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்குஊனமன்றே**
**கைவினைசெய்தெம் பிரான் கழல் போற்றுதும்**
**—நாமடியோம்**
**செய்வினை வந்தெம்மைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்**
(தேவாரம்)

எனும் ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப்பாடலில் காண்கின்றோம். கைவினை என்பது செய்யும் தொழில் அல்லது செய்யும்வினை. அதனைப் பிரான்கழல் வணங்கிச் செய்வதால் செய்யும் வினைப்பயன் வந்து தீண்டாது என விளம்புகிறார் ஞானசம்பந்தப் பெருமான். இவ்வாறு செயலாற்றுவதால் பிறவிக்கு வித்தாகிய வினை அழிகிறது. காலாந்தரத்தில் இருவினையொப்பு, மலபரிபாகம் அமைகிறது. அதனால் பேரானந்தப் பெருவாழ்வு வந்தெய்துகிறது. இவ்வாறு பெருநெறிக்கு இட்டுச்செல்லும் அருணகிரியார் வறியார்க்கு ஈதலை மேலும்மேலும் எடுத்துரைப்பதை அவர் பாடல்களில் பார்க்கலாம்.


**வேடிச்சிகொங்கை விரும்புங்குமரனை மெய்யன்பினால்**
**பாடிக்கசிந்துள்ள போதேகொடாதவர் பாதகத்தால்**
**தேடிப் புதைத்துத் திருட்டில்கொடுத்துத் திகைத்து இளைத்து**
**வாடிக்கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே**
(கந்தர்அலங்காரம்)

இப்பாடலில் தேடியபொருள் கையில் இருக்கும் போது பசியால் வருந்தும் வறியார்க்குக் கொடுப்பதை விடுத்து கொடாத பாவத்தால் திருட்டிற் கொடுத்துத் தவிக்கும் மக்களை நோக்கி இரக்கப்படுவதோடு கொடாமையால் விளையும் கேட்டினைச் சொல்லி முருகனை உண்மை அன்போடு பாடுங்கள். ஏழைகள் பால் மனங்கசியுங்கள். கையில் பொருள் உள்ளபோதே கொடுங்கள் எனச் சொல்லியிருப்பது கல்நெஞ்சங்களையும் கனியவைக்கும் செயலாக அமைகின்றது. பாடலில் இருக்கும் கசிந்து என்னும் சொல் மனம் கசிதலாகிய இரங்குதலைக் குறிக்கும். ஏழைகளைப் பார்த்து இரங்கு என்பதே அதன் முழுப்பொருளாகும். இதே கருத்தினையே திருப்புகழிலும் **உம்பர்தரு தேனு மணிக்கசிவாகி** என விளக்கமாகப் பாடியுள்ளார். இத் தொடரில் வரும் தரு, தேனு, மணி மூன்றும் தேவர் உலகத்துக்குரியவை. தரு என்பது கற்பக விருட்சம். இதன் கீழ்ச் சென்று எதைப் பெற ஒருவர் நினைக்கிறாரோ அதனை அது உடனே கொடுக்கும். தேனு என்பது காமதேனு என்னும் பசு. இதனிடம் சென்று எதனைக் கேட்பினும் அதனை உடன்கொடுக்கும். மணி என்பது சிந்தாமணி.

42ம் பக்கம் பார்க்க ....

# சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள்

அரையில் துலங்கு வெள்ளாடை, தோளில் அதற்கிசையப் போர்த்த மேலாடை, நெற்றியில் தூயவெண்ணீற்று அனுட்டானக்குறி, எடுப்பு மிக்க சைவக் குடுமி, நாயகன் சேவடி தைவருஞ் சிந்தை எனும் லட்சணங்களுடன் குமிழி மிதியடியில் இவ்விருபதாம் நூற்றாண்டின் மத்தியிலும் உலாவந்தார் ஒருவர். அவர் பீ.ஏ. பட்டதாரி. அவர்தான் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம்பிள்ளை.



சைவத்தையும் தமிழையும் இருகண்களெனப் போற்றிய குடும்பத்தில் வ.சுப்பிரமணிய பிள்ளைக்கும் வள்ளியம்மையாருக்கும் புத்திரராக ஈசுவர வருடம், தை மாதம் (1878) பதினேழாம் திகதி புலோலியிலே சிவபாதசுந்தரனார் தோன்றினார். இவர் சிறிய தந்தையர் இருவருள், மூத்தவர் மகாவித்துவான் வ.கணபதிப்பிள்ளை (1895). காஞ்சிபுரம் பச்சையப்பன் வித்தியாசாலை, திருவனந்தபுரம் மகாராஜக் கல்லூரி என்பனவற்றிலே தமிழ்ப் பேராசானாக விளங்கி, சென்னைத் திராவிட வர்த்தன சபைப் பண்டிதராகத் திகழ்ந்து, மாகறல் கார்திகேய முதலியார் முதலானோர்களின் ஆசிரியராக மிளிர்ந்த இவர் பல நூல்களை இயற்றியவர். இளையவர் இலக்கணக் கொத்தர் வ.குமாரசாமிப்புலவர் (1926) நன்னூற் காண்டிகையில் நுழைந்த வழுக்களைக் களைந்து உரைவிளக்கம் தந்தவர்.

சகோதரி உமாமகேசுவரியார் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை உபாத்தியாயரின் பாரியார். இத்தகைய சூழலிற்பிறந்து வளர்ந்த சிவபாதசுந்தரனார் தமிழ்நாட்டில் உயர்தரக்கல்வி பயின்று, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பீ.ஏ. பட்டத்தினைப் பெற்றார். கணித சாத்திரத்தை ப்பட்டத்தேர்வுக்குப் பாடமாகக்கொண்ட போதும் தர்க்க சாத்திரத்திலும் மனோதத்துவ சாத்திரத்திலும் கூடத் துறைபோனவர். அவ்விரு சாத்திரங்களிலும் (ESSENTIALS OF LOGIC1952) அளவைநூல், அகநூல் (PSYCHOLOGY) எனும் நூல்களை அளித்தவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சரிதத்தை ஆசை பற்றி ஆங்கிலத்தில் அறையலுற்ற பிள்ளைவர்கள், நாவலரவர்களை முன்மாதிரியாகக் கொண்டு சைவ பரிபாலனத்துக்கே தம்மை அர்ப் பணித்தார். நாவலரவர்களுக்குப் பின் ஈழத்திலே சைவ சமயத்தினைப் பராமரிக்க முன்னின்ற பெரியாருள் ஒருவரான பிள்ளையவர்கள், அச்சமய உண்மைகளை விளக்கியும், அச்சமய வழிபாட்டிற் புகுந்த மாசுகளைத் துடைக்க முயன்றும் பிறமதச் செல்வாக்கைத் தகர்த்தும் தம் சமய உயர்ச்சிக்கான வழிதுறைகளில் முன்னின்று அரும் பணியாற்றினார். இவர் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டார். இவற்றுள் 1920 இல் சில திங்கள் வரை மானிப்பாய் இந்துக்கல்லூரித் துணையதிபராகவும் 1924 முதல் 1933 வரை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபராகவும் திறம்பட வழிநடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

1933க்குப்பின்னர் பரமேஸ்வராக்கல்லூரியிற் சில வருடம் வேதனமின்றிப் பணியாற்றிய பிள்ளையவர்கள் தம் பிற்காலத்திற் தம்மை நாடிவந்த மாணாக்கருக்குச் சித்தாந்த சாத்திரங்களைப் போதித்துக் கொண்டிருந்தார்.

"படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்" ஆக்கியளித்த பிள்ளையவர்கள் சைவ சமய உண்மைகளை விளக்கிய திறமையை அவர்கள் தமிழில் எழுதிய சைவபோதம் முதற்புத்தகம், சைவபோதம் இரண்டாம் புத்தகம்(1916) சைவசமயசாரம்(1947) சைவசித்தாந்தம் (1932) கந்தபுராண விளக்கம், சைவக்கிரியை விளக்கம்

என்பனவும், திருவருட்பயன் விளக்கஉரை (1918) திருப்பெருவடிவம்(1939) திருவாசக மணிகள் என்பனவும் தெளிவாக உணர்த்துவன.

**சைவபோதங்களும் சைவ சமய சாரம், சைவசித்தாந்தம் என்பனவும்** எளிமையும் சுருக்கமும் தெளிவும் சிறந்து சைவசமய உண்மைகளை விளக்கி நிற்பவை. கந்தபுராணத்தின் மகிமையைச் சுருக்கமாகக் கூறிப் புராணம் பொய் அல்ல என்பதைத் தெருட்டி அருங்கவிகளின் சாத்திரக் கருத்துக்களைத் தொ-ரிவிப்பது **கந்தபுராண விளக்கம்.** நித்தியா நுட்டானங்களை எப்படி, ஏன் செய்யவேண்டும் என்பதைச் சுருக்கமாக நன்கு விளக்கியமைவது **சைவக்கிரியை விளக்கம்.** சைவக்கடலைக் குறளுருவிற்றரும் **திருவருட்பயனுக்குப்** பிள்ளையவர்கள் கண்டவுரை அவருடைய சாத்திரப் பயிற்சிக்கும் தர்க்க வன்மைக்கும் சிறந்த எடுத்துக்காட்டு. பழைய உரைகளின் மயக்கங்களை நீக்குவது. கந்தபுராண சூரபன்மன் வதைப் படலத்திலுள்ள திருவிருத்தங்களுக்கு விரிவுரையாக அமையும் **திருப்பெருவடிவம்** முருகப்பெருமானின் விசுவரூபதரிசனத்தை நன்கு விளக்குவது. திருவாசக பாராயணத்தில் விருப்பினைத்தூண்டி சில பாசுரங்களின் அரும்பெரும் பொருளை உணர்த்தி விளக்குவது **திருவாசக மணிகள்.** ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, கொக்குவில் குகதாசர் ச.சபாரத்தினமுதலியார் வரிசையிற் சைவ சித்தாந்தத்தின் மேன்மையை மோனாட்டினருக்கு அறிவுறுத்தியவர் சைவப் பொ-ரியர் சிவபாதசுந்தரனார்.

இவருடைய **SAIVA SCHOOL OF HINDUISM** எனும் நூல் ஆங்கில பிரசுரகர்த்தாக்களால் ஏற்கப்பட்டுத் தங்கள் செலவிலேயே அச்சிடப்பெற்ற சிறப்பினையுடையது, மேலைநாடுகளிற் சித்தாந்த விற்பன்னர் எனும் பெயரைப் பிள்ளையவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தது. **(AN OUTLINE OF SIVAGNANA BOTHAM WITH A REJOINDER TO A CHRISTIAN CRITIC (1951), THE GLORIES OF SAIVAISM (1954)** என்பனவும் இவ்வழியில் நோக்கத்தக்கவை. தருமபுர ஆதீனத்தார் 1948 இலே இவரைத் தமிழ் நாட்டிற்கு அழைத்து, இவரைக் கொண்டு நல்லசாமிப் பிள்ளையின் சிவஞானசித்தியார் மொழி-பெயர்ப்பைத் திருத்தியும் புதுக்கியும் வெளிப்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நாவலரவர்களுக்குப் பின் கிறித்தவச் செல்வாக்கு அதிகரித்த காலகட்டத்திலே பிள்ளையவர்கள் கிறித்தவ கண்டனப் பிரசுரம் செய்து துண்டுப் பிரசுரங்கள் இயற்றிக் கிறித்தவர் குறித்தவையும் சைவசமயிகளிடையே புகுந்தனவுமாகிய மாசுகளைத் துடைக்க முற்பட்டார். இரண்டாம் சைவ போதத்திலே தாவர உணவின் மேன்மையையும் புலால் உணவின் இழிவையும் விளக்கி, கந்தபுராணவிளக்கத்திற் புராணங்களின் நற்பொருளை எடுத்துக் காட்டிய பிள்ளையவர்கள் மிருகபலிக்கு எதிராகச் செய்த பிரசாரம் குறிப்பிடத்தக்கது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (HINDU BOARD) தலைவராகப் பணிபுரிந்த சிவபாதசுந்தரனார் கிராமந்தோறும் சைவப் பள்ளிகளைத் தாபித்தலிலே முன்னின்று உழைத்தார். 1939 ஆம் ஆண்டு அரசு கல்வி முறையைத் திருத்த நிறுவிய ஆணைக் குழுவிலே சிவபாதசுந்தரனார் உறுப்பினராக இடம்பெற்றார்.

ஒவ்வொரு மூச்சும் சைவ மூச்சாகக்கொண்டிருந்த சைவப் பெரியாரின் இறுதி மூச்சு திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணியாகும். 1948 ஆம் ஆண்டு அங்குரார்ப்பணஞ் செய்யப்பெற்ற திருக்கேதீச்சரப் புனருத்தாரணத் திருப்பணிச் சபையின் செயற்குழுத் தலைவராகச் சிவபாதசுந்தரனார் தெரிவு செய்யப்பெற்றவர். தமது செலவிலே நடராஜ மூர்த்திக்கும் அம்பாளுக்கும் திருமேனிகள் எழுந்தருளிவித்தவர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் மடம் அவர் தலைமைக் காலத்திலேயே கட்டி முற்றுவிக்கப்பட்டது. மூப்பும் பிணியும் கால்கொண்டமையில் 1952 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தலைமையைத் துறந்து ஆலோசகராகத் தொடர்ந்த சிவபாதசுந்தரனார் விஜய வருடம் ஆடிமாதம் முப்பதாம் நாள் (14.08.1953) புகழுடம்பு எய்தினார்.

A.S. KUGANN
PHOTOGRAPHY

A reasan to smile

**Wedding**
**Engagement**
**Coming of age ceremony**
**Arangetram**
**Birthday**
**Commercial & Advertising**
**Variety of albums**



For all your occasions



Photography Specialist

**07899 811 402**

info@askugann.co.uk
www.askugann.co.uk

# ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் (மயிலணி சிவன் கோயில்)

## திருத்தலவரலாறு

சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக்குருக்கள்

சுன்னாகம் மயிலணி குடவாயிற்கோட்டத்தில் எழுந்தருளியிருந்து வேண்டுவார் வேண்டுவதையீந்து அருள்புரியும் ஸ்ரீ விஸ்வநாதப் பெருமானுடைய திருத்தல மாண்பினையும் சிறப்புக்களையும் ஈண்டு சிறிது நோக்குவோம்.

**தக்ஷிண கைலாசம்**

மிகப் பழையகாலத்தில் ஒரு சமயம் உலகினைத் தாங்குபவனும் திருமால் பள்ளி கொள்ளும் பாயலாக அமைந்தவனுமாகிய ஆதிசேடனுக்கும் உலகின் உயிர்களுக்கெல்லாம் உயிரூட்டுபவனுமாகிய வாயுதேவனுக்கும் இடையில் யார் பலசாலி என்பதில் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் தாம் தாமே மிகுந்த பலசாலி என்று வாதிட்டனர். ஈற்றில் மாஹாமேருமலைச் சிகரத்தை வாயுதேவன் பறித்து வீசவேண்டும் என்றும் அவ்வாறு அச்சிகரத்தைப் பெயர்க்கவிடாது ஆதிசேஷன் தன் வலிமையினால் தடுக்க வேண்டுமென்றும் முடிவாகியது. ஆதிசேஷன் தனது ஆயிரம் தலைகளின் படத்தை விரித்து மஹாமேருவையும் அதன் சிகரங்களையும் அசைக்கமுடியாதவாறு பாதுகாத்தான். வாயுதேவனும் தனது பயங்கர வலிமையுடன் சுழன்றடித்து மேருசிகரத்தைப் பெயர்ப்பதில் கண்ணாக இருந்தான். இருவருக்குமிடையில் கடும் போட்டி இடம்பெற்றது. காலம் சென்றுகொண்டிருந்தது. ஆதிசேஷன் சிறிது சிறிதாக தளர்வடைந்து கொண்டிருந்தான். வாயுதேவனோ மிக உக்கிரமாக வீசிக்கொண்டிருந்தான். இறுதியில் ஆதிசேஷனின் பிடியை முற்றாக நீக்கி மேருச் சிகரத்தை வலிவோடும் பறித்துத் தென் கடலில் வீசினான்.



தென்கடலுள் வீழ்ந்த சிகரம் இலங்கித் தோன்றியபடியால் தக்ஷிண கைலாசமென்றும் இலங்கை என்றும் அழைக்கப்படுகிறது.

வாயுதேவனால் வீசப்பட்ட அச்சிகரம் தெற்கே அடிப்பாகமும் வடக்கே முடிப்பாகமுமாக வீழ்ந்தது. இலங்கையின் வரைபடத்தை உற்று நோக்குவோர் இதனை எளிதில் உணரலாம். மலைகளின் அடிப்பாகத்தை விட முடிப்பாகத்திற்கே என்றும் தெய்விகத்தன்மையும் பெருமையும் சிறப்பும் அதிகம் உண்டு. இலங்கையிலும் முடிப்பகுதியாகிய வடபகுதியே தெய்விகத தன்மையும் பெருமையும் பொருந்தியதாக அமைந்தது. புனிதமான முடிப்பாகமாகிய வடபகுதியின் எல்லையாக ஞான சம்பந்தராலும், சுந்தரமூர்த்திசுவாமிகளாலும் பாடி வணங்கப்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன அமைந்துள்ளன.

**சுன்னாகம்**

தக்ஷிண கைலாசத்தின் மிக முக்கியபகுதி சுன்னாகம் என்ற இடமாகும். சுல் + நாகம் ஸ்ரீ சுன்னாகம். சுல் என்பது வெள்ளி. நாகம் என்பது மலை. சுன்னாகம், கயிலைமலை, ரஜதகிரி, ரஜதாசலம் என்பன ஒரே கருத்துடைய பெயர்களாகும்.

**சுப்பிரமணியர் பூசித்த வரலாறு**

சுன்னாகம் என்ற இடம் பழைய காலத்தில் சிறு குன்றாக அமைந்திருந்தது. ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான் சூரசம்ஹாரம் முடித்துத் தேவர்சிறை மீட்டு மயில்வாகனத்தில் ஆரோகணித்து வருகையில் சுன்னாகப் பதியைக் கண்ணுற்றதும் திருக்கயிலையில் இறைவியுடன் எம் பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலம் மனத்தில் தோன்ற மயில் வாகனத்தினின்றும் இறங்கி அவ்விடத்தில் தேவகம்மியனைக் கொண்டு ஓர் ஆலயம் அமைப்பித்து தந்தையின் சிவலிங்க வடிவத்தைத் தாபித்துச் சிவாகம விதிப்படி சிவபூசை செய்தருளினார். அசுரர்களைக் கொன்றதனா லேற்பட்ட பாபம் சிவபூசையினால் நீங்கப்பெற்றது. முன்னர் தாரகாசுரனை அழித்தபின் சேய்ஞ்ஞலூர் என வழங்கப்பெறும் குமரபுரியிலும் பின்னர் திருச்செந்தூரிலும் முருகப்பெருமான் சிவபூசை செய்தமை கந்தபுராணத்தில் காட்டப்பட்டுள்ளது. இராவண சம்ஹாரம் முடிந்து மீளுகையில் இராமேஸ்வரத்தில் இராமபிரான் சிவபூசை செய்தமையும் வில்வலன் வாதாபி ஆகியோரை அழித்தபின் அகஸ்திய முனிவர் கொங்குநாட்டில் சிவபூசை செய்தமையும் ஈண்டு நினைவுகூரப்படற்பாலன.

முருகப்பிரானின் பூசனையினால் மகிழ்ந்த சிவபெருமான் தமது ஆனந்த நடனக் காட்சியைக் காட்டியருளினார். வீரவாகு தேவரும் இலக்கத்தெட்டு வீரர்களும்,
கணநாதர்களும், பிரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலாகிய தேவர்களும் இறைவனின் திருநடனக்காட்சியைக் கண்டு வணங்கி இறும்பூதெய்தி நின்றனர். அச்சமயத்தில் குமரப்பெருமானின் வாகனமாகிய மயிலானது ஆனந்த மேலீட்டினால் தனது தோகையை விரித்தாடியபடியே சிவபெருமானையும், சிவகுமாரனையும் வலம்வந்து வணங்கி நின்றது. முருகப்பெருமான் மகிழ்ந்து மயிலை நோக்கி உன்பெயரால் இத்தலம் மயிலணி என வழங்குவதாக என ஆசீர்வதித்தார். இக்காரணத்தால் இத்தலம் மயிலணி என்றே வழங்கப்படுகின்றது.

ஆன்மார்த்தமாகச் செய்யப்படும் சிவபூசையிலும் யாகங்களிலும் மேற்குத் துவாரத்திலேயே நித்தியத் துவாரபூசை செய்யப்படவேண்டும் என வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டுள்ளது. இறைவனின் சத்யோஜாத முகத்தை அபிமுகமாகக்கொண்டு துவாரபூசை செய்து இறைவனை வழிபடுவோர் போக மோக்ஷங்களை இலகுவில் பெறுவார்கள். முருகப்பெருமான் சிவபூசை செய்து வழிபாடியற்றிய இத்திருத்தலமும் மேற்கு நோக்கிய சன்னதியாக அமைந்துள்ளமை மேற்கூறிய ஆகம விதிகளுக்கு விளக்கமாக இருக்கின்றது. மேலும் சம்பாதி– சடாயு என்னும் புள்ளரசர்களாலும் வேதங்களினாலும், முருகவேளினாலும், அங்காரகனாலும் பூசிக்கப்பட்ட தலம் புள்ளிருக்குவேளூர். (புள் இருக்கு வேள்) இத்தலம் இன்று வைத்தீஸ்வரன் கோயில் என அழைக்கப்படுகின்றது. இக் கோயிலும் மேற்கு வாயிலாகவே அமைந்துள்ளமை நோக்கற்பாலது.

**இராவணன் வழிபாடு**

இலங்கேஸ்வரனாகிய இராவணன் திருக்கயிலையை எடுக்கச்சென்று அதனுள் நசுங்கி வருந்திப் பின் வாகீச முனிவரால் வழிப்படுத்தப்பட்டு சாமகானம் பாடி உய்வடைந்தான். பின்னர் தான் ஆணவத்தினால் செய்த தவறை உணர்ந்து தான் செய்த சிவாபராதம் நீங்குவதற்காக இத்திருத்தலத்திற்கு வந்து பிரதோஷவிரதமிருந்து சிவபூசை செய்து வந்தான். தொடர்ந்து அவனால் அனுட்டிக்கப்பெற்ற விரத பூசைகளினால் மகிழ்வடைந்த இறைவன் அவனுக்குக் காட்சி

43ம் பக்கம் பார்க்க ...

# உங்கள் சன்டிவியில்
# நாளொன்றுக்கு 11 மெகாத்தொடர்

மெட்டிஒலி





அண்ணாமலை



மனைவி



கோலங்கள்



உங்கள் சாய்ஸ்



அரட்டை அரங்கம்



காமடி டைம்






*Introduce a friend/relative and get*

***"FREE DISCOUNT VOUCHER"***

*Watch* SUN TV *Enjoy* KTV

**0208 33 56780**

உலகுக்கு ஓர் சூரியன் உலகத்தமிழருக்கும் ஓர் சூரியன்

# M. K. SRI & Co.

## Solicitors & Administrators of Oaths

**2C, Fairholme Road (Off Station Road)**
**Harrow, Middlesex, HA1 2TN**

**Tel: 020 8515 7000 (4 lines)**
**Fax: 020 8515 7030**
**Fax: 020 8515 7031 (For Conveyancing only)**
**DX: 4232 Harrow (1)**

**We specialise in**

- Immigration • Crime
- Conveyancing • Matrimonial
- Traffic Offences • State Benefits
- Wills & Probate • Employment
- Advice & Assistance at Police Station

**Legal aid work undertaken**

**We Are Franchised by the Legal Services Commission in Immigration**

**PARTNERS:**
M. K. SRITHARAN
S. SIVASANTHIRAN

**ASSISTANT SOLICITOR:**
SELVI RAVINDRAN

**TRAINEE SOLICITORS:**
AVTAR MANKU
V.KARUNASAAGARAR
T.JOGANATHAN

Our New Service:

Work Permit Scheme Advantages

* To enter work and live in the UK through the Work Permit Scheme
* Applies to all whether in the UK or in any part of the world
* Switching allowed from Visitor, Student and Dependant Visas
* Change of Employment afterword is possible
* Permanent Residency in the UK is possible after 4 years of work permit employment

**CONSULTANTS:**
INDRA SEBASTIAN LLM &
MANNAN THANGARAJAH LLM

# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

ஜோதிடபூஷணம்,துன்னையூர்
ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்

**(நக்ஷத்திரங்களின் குணஇயல்பு பற்றிய தொடர்)**
சென்ற இதழ் தொடர்ச்சி ......

**மகம் நக்ஷத்திரம்:—** இந்த நக்ஷத்திரத்தின் அதிபதிக்கிரஹம் கேது. இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் சிம்ம ராசியிலே அடங்கும். பொதுவாக இந்த நக்ஷத்திரத்தை உடையவர்கள் நல்ல ஆளுமைத் திறன் உடையவர்கள். பெரிய நிர்வாகங்களை நடாத்தக்கூடிய ஆற்றல் இருக்கும். முன்கோபம் சற்று அதிகமாக இருக்கும். தங்கள் காரியங்களில் கண்ணும் கருத்துமாய் இருந்து செயற்படும் திறமை கொண்டவர்கள். கல்வி, தொழில் நிலையில் நல்ல மேம்பாடு உடையவர்களாக திகழ்வார்கள். ஆனால் அதிகமான எதிரிகளை சம்பாதித்துக் கொண்டு இருப்பார்கள். நிதானமான போக்கும் செயற்பாடும் இவர்களிடம் சற்றுக்குறைவாகவே இருக்கும். தங்களுடைய காரியங்களுக்காக எதையும் விட்டு பின்பு வருத்தப்படுகின்ற நிலை இவர்களிடம் அதிகம் இருக்கும். மகத்தில் பிறந்தோர் ஜெகத்தை ஆளுவர் எனும் முது மொழியும் உண்டு. இருப்பினும் குடும்ப வாழ்வில் ஏதோ குறை இவர்களை வாட்டிய வண்ணமே இருக்கும். பொதுவாகவே கேது சம்பந்தமுடையது மகம். அஸ்வினி, மூலம் போன்ற நக்ஷத்திரம் உடையோர், மற்றும் 7 ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தோர் பெரும்பால—னவர்களுக்குப் பூரணத்துவமான சிறந்த குடும்ப வாழ்க்கை சந்தோஷமாக அமைவது சற்றுக் குறைவு. ஏதோ ஒருவகையான துன்பம் இருக்கும்.

இந்தநக்ஷத்திரத்தின்அதிஷ்டரத்தினம்:—வைடூரியம். வழிபடுதெய்வம்: அம்மன், பலவர்ண நிறங்கள் இவர்களுக்கு அதிஷ்ட நிறமாக அமைகின்றன.

**பூரம் நக்ஷத்திரம்:—** இந்த நக்ஷத்திரத்தின் அதிபதிக்கிரஹம் சுக்கிரன். பொதுவான நல்ல இனிமையும், மற்றவர்களைக் கவரும் தன்மையும், எல்லோருடனும் அன்பாக பழகுகின்ற செயற்பாடும் கொண்டவர்கள். இந்த நக்ஷத்திரத்தில் பிறந்தோர் வாழ்க்கையில் சுகபோகங்கள் பலவும் இவர்களைத் தேடிவரும் நிலை உண்டு. விடாமுயற்சி இவர்களுக்கு கை வந்த கலையாகும். இருப்பினும் ராசியின் அதிபதிக்குணம் இவர்களிடம் இடையிடையே முன்கோபம், சமயமறிந்து தான் மட்டும் தன் காரியத்தில் ஜெயித்து செல்லுகின்ற தன்மைகள் போன்றவை அதிகமாக இருக்கும். திருமண விடயங்களில் இழுபறி நிலை, கால தாமதங்கள் என்பன ஏற்பட்டு மறையும் பலன் உண்டு. கல்வி நிலையில் இவர்களுக்கு அதிஷ்டமான சாதுரியமான நிலைகள் அதிகம் ஏற்படும். உயர் கல்வி நிலை அமையும் பலன்களும் இவர்களுக்கு உண்டு. இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் சிம்ம ராசியிலேயே அடங்கும். நக்ஷத்திரத்தின் அதிஷ்ட ரத்தினக்கல்:— வைரம், வழிபடு தெய்வம்: முருகன், அம்பாள். பல உயர்வு தரக்கூடிய நக்ஷத்திரமாக பூரம் அமைகின்றது. வெள்ளை, சிவப்பு, நிறங்கள் அதிஷ்ட நிறங்களாக அமைகின்றன.

**உத்தரநக்ஷத்திரம்:—** இந்த நக்ஷத்திரத்தின் அதிபதிக்கிரஹம் சூரியபகவான். இந்த நக்ஷத்திரத்தின் முதல் பாதம் சிம்ம ராசியிலும், மற்றய மூன்று பாதங்களும் கன்னிராசியிலும் அமைகின்றன. பொதுவாகவே பிறர் மீது இரக்கம் கொள்ளும் பாச உணர்வு கொண்டவர்கள். வித்தைகள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்தவர்கள். பலதரப்பட்ட தொழில் செய்தும் பணத்தை சம்பாதிக்கக்கூடிய வல்லமை உடையவர்கள். எடுக்கின்ற முயற்சிகளில் சளைக்காது வெற்றி காணக்கூடிய தன்மைகள் உடையவர்கள். தங்களுடைய செயற்பாட்டில் உறுதியும் தளர்வில்லா தன்மையும் கொண்டு விளங்குபவர்கள். அழகு, கவர்ச்சி, கம்பீரம் போன்றவற்றை தம்மிடையே கொண்டு விளங்குபவர்கள். நக்ஷத்திர அதிபதியான சூரியன் அமைவது அழுக்கமான பிடிவாதம் சற்று அதிகமாகவே இருக்கும். அதிலும் சிம்மராசி

அமைந்தவர்கள் சற்று அதிகமாகவே தாம் நினைத்ததை சாதித்து செயல்படும் குண இயல்பு உடையவர்கள். பொதுவாக வாழ்வியலிலே பலவிதச் சிறப்புக்களும் பூரணத்துவமாக பெறக்கூடிய தன்மைகள் மிகவும் அதிகம் கொண்டவர்கள். எடுக்கின்ற வாழ்வியலில் செயற்பாடுகள் பெரும்பாலும் இவர்களுக்கு நன்மை தருவனவாகவே அமையும். குடும்ப வாழ்விலும் சமூகத்திலும் அதிகமான சிறப்பியல்புகள் கொண்டு வாழும் தன்மை உடையவர்கள். இவர்களின் அதிபதித் தெய்வம் சிவன், அம்பாள் வழிபாடுகள் சிறப்புத்தரும். அதிஷ்ட ரத்தினம்:- மாணிக்கமும் சிவப்பு நிறமும் இவர்களுக்கு அதிஷ்டம் தருவனவாக அமையும்.

**அத்தம்நக்ஷத்திரம்:-** இந்த நக்ஷத்திரத்தின் அதிபதிக்கிரஹம் சந்திர பகவான். இந்த நக்ஷத்திரத்தின் நான்கு பாதங்களும் கன்னி ராசியில் அமைகின்றன. பொதுவாகவே இவர்களுடைய குண இயல்புகளிலே சற்று மந்தமான நிலைப்பாடு இருக்கும். மற்றவர்களுடைய வளர்ச்சியைப் பொறுக்கமுடியாத தன்மை உடையவர்கள். எதையும் வெளிப்படையாக பேசுகின்ற குணம் அற்றவர்கள். மனத்துக்குள்ளே என்ன நினைத்து வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வது மிகவும் கடினமானது. வாழ்விலும் இவர்களுக்கு ஏற்றம், இறக்கம் சற்று அதிகமாக இருக்கும். ஒரே சீரான சிறப்பியல்புகள் அமைவது இவர்களுக்கு சற்றுச் சிரமமே. தொழில் நிலைகளில் நல்ல உயர்வுகள் அமையக்கூடிய நிலைப்பாடு இவர்களுக்கு உண்டு. குடும்பத்திலும் சற்று மந்த நிலைகள் இடையிடையே ஏற்பட்டு மறையும். பொதுவாக அதிகமான போராட்டம் வாழ்க்கையில் இருக்கும். தனது சொந்த வீட்டில் இருந்து மறைவுஸ்தானமாகிய 3 ஆம் இடம் அமையும் இடம் இந்த கன்னி ராசி. எனவே பலவிதமான சிக்கல்கள், சஞ்சலம், நிதானமான முடிவு எடுக்கமுடியாத தன்மைகள் என்பன இவர்களுக்கு உண்டு. இவர்கள் அதிபதித் தெய்வங்களான அம்பாள், விஷ்ணு வழிபாடு செய்யலாம். அதிஷ்ட ரத்தினம்: முத்து, அதிஷ்ட நிறங்களாக வெள்ளை, பச்சை நிறங்கள் அமைகின்றன.

****

## மஹாளய சிராத்தம்


சைவ மக்கள் இவ்வுலக வாழ்வை நீத்த தங்கள் உறவினர்களின் நலத்துக்காக அவரவர் மறைந்த மாதம் மறைந்த திதியில் வருடந்தோறும் செய்வது வருடசிராத்தம். புரட்டாதி மாதம் அபரபட்ச பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள திதி ஒன்றில் அவர்களுக்காகச் செய்வது மஹாளய சிராத்தம். தை மாதம் முதல் ஆடிமாதம் வரையான ஆறுமாத காலம் தேவர், பிதுர்களுக்குப் பகல் எனவும், ஆடி மாதம் முதல் மார்கழி வரையான ஆறு மாதகாலம் அவர்களுக்கு இரவு எனவும் கொள்ளப்படும். வருட சிராத்தம் பிதுர்களுக்குப் பகற் போசனம் போலவும் மஹாயள சிரத்தம் இராப்போசனம் போலவும் பலன் தரும். மஹாளய பட்சத்தில் ஏதாயினும் ஒரு திதியில் தத்தம் பிதிர்களுக்கான சிராத்தம் செய்தல் சைவ மக்களின் அவசியமான கடமை. அதனை அவரவர் இறந்த திதியில் செய்தல் சிறப்புடையது.

சிராத்தம் செய்தலின் பலன்: இவ்வுலக வாழ்வை நீத்தவர் மற்றொரு பிறவி எடுத்திருந்தால் அவர் வாழ்வில் மேலதிகமான நலன்கள் சேரும். மற்றொரு பிறவி இன்னும் எடுக்காதிருந்தால் அவர் ஆன்மா படும் துன்பம் குறையும்.

**குறிப்பு:-** இவ்வருடம் 29-09-2004 முதல் 13-10-2004 வரையான காலம் மஹாயள பட்சமாகும். இந்நாட்களில் சிராத்தம் செய்ய விரும்புவோருக்கு சைவ முன்னேற்றச் சங்கம் (ருமு) உதவக்காத்திருக்கின்றது. குருக்களைத் தங்கள் இல்லத்துக்கு அழைத்தோ அல்லது சிராத்தம் செய்பவர் சங்கப் பணிமனைக்கு வந்தோ கிரியைகளைச் செய்விக்கலாம்.

**தொடர்புகளுக்கு:- Tel: 020 8514 4732**


**e mail :sms@smsuk.org.uk**


KRS
Oriental Store
33 Lee High Street
Lewisham
London SE13 5NS
தரமான இலங்கை, இந்திய
உணவுப்பொருட்கள் உடன்
மரக்கறி வகைகள்
ஓடியோ, சீடி, வீடியோ
அனைத்தையும் நியாயமான
விலையில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
Telephone
020 8297 9432

# 1. MANICKAVACHAKAR


*Story* : **RV**
*Graphics* : **Sankar**

1 Arimardana Pandyan was ruling at Madurai. He had appointed Thiruvadhavurar as his prime minister. One day a General appeared in the royal court.





2 The next day Thiruvadhavurar proceeded to the sea-shore riding in a palanquin and accompanied by royal troops. Camels carried the bags of gold.


3 Lord Siva decided to shower His grace on Thiruvadhavurar. He took His seat under a banyan tree in the town of Thiruperunthurai. He was surrounded by His disciples. Seeing this...




4 Thiruvadhavurar got down from the palanquin and made salutations to the Lord. Then the Lord gave him a mantra and showed him His divine form.
Thiruvadhavurar forgot himself and adorned the Lord with a garland of hymns glowing like rubies. He became Manickavachakar (One whose speech is like that of ruby).



5 Then the Prime Minister forgot the mission entrusted to him by the king. He spent all the money he had brought for purchase of horses for the renovation of the Siva temple.




6 When the horses did not turn up in June the king sent the soldiers to question the Prime Minister.




Declared the Lord's formless voice.


7 The king came to know that his minister had not used the money to purchase horses but had used it all for temple construction. Extremely angry, he ordered the soldiers to arrest and bring Thiruvadhavurar. The soldiers brought him before the king.





8 The warders imprisoned the minister in a dark cell and made him carry heavy bricks.

9 By Lord Siva's grace all the jackals in that area became transformed into horses on the night of Mulam. Siva's attendants became the horsemen and the Lord Himself appeared as their captain. This procession entered the streets of Madurai in great splendour early the next morning.




10
Oh! What marvellous horses and horsemen! Soldiers, at once go and free the minister and saluting him bring him here.
11
Thiruvadhavurar, I harassed you thoughtlessly. Please forgive me.
12 That night all over the town there was heard the howling of jackals. The king woke up and looked.
Ah! What fraud! Jackals have appeared as horses! Seize that cheat of a minister and put him in jail. Give him severe punishment.
13 Thiruvadhavurar was again imprisoned and subjected to severe torture.
14 By the will of the Lord, Vaigai river suddenly burst into floods and the water entered the city.
The king came running.
One person from each house should come to close the gap in the bund. The flood must be halted by piling up earth.

15 People began to gather at the bank of the river with basket loads of earth. There was an old woman who was living by selling bread. Her name was Vandhi. She was searching for some one who would take over her share of transporting earth. The Lord Himself came to her in the guise of a labourer.





16 All were working vigorously. Only the old woman's helper sat on the river bank, enjoying the work of the others. The king noticed this.




**Thanks to Ramakrishna Mission Madras.**

17 The king whipped him and the blows fell on the backs of everyone there! The king also smarted at the blow, but at once he realized what had happened. He ran to Thiruvadhavurar in the jail.




18

By the Lord's grace the flood water subsided. Manickavachakar took leave of the king and took sannyas. He visited many Siva temples and finally arrived at Chidambaram. There he got merged in the Lord. Manickavachakar composed the hymn known as Thiruvachakam. It remains a priceless treasure for all Tamilians, breathing as it does the fragrance of the glory of God.



# தாத்தாவும் கண்ணனும்

**– முத்து –**

பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்த தாத்தா சுவரில் தொங்கும் மணிக்கூட்டைப் பார்த்தார். நேரம் 5 மணியாகப் போகிறது. இன்று முருகன் கோயிலில் அறுபத்துமூன்று நாயன்மாரில் ஏதோ ஒரு நாயனாரைப் பற்றிய சொற்பொழிவும் இருக்கும். ஆனபடியால் கட்டாயம் போகவேண்டும் என்று தீர்மானித்தார். ரெலிவிசன–ில் சிறுவர் நிகழ்ச்சியை ரசித்துப்பார்த்துக்கொண்டிருந்த பேரனைக் கூப்பிட்டார்.

**தாத்தா:–** கண்ணா! கண்ணா! அப்பா எத்தனை மணிக்கு வேலையால் வருவார்?
**கண்ணன்:–** தாத்தா! கொஞ்சம் பொறுங்கோ! வருகிறேன். இந்த நிகழ்ச்சி முடியுமட்டும் பொறுங்கோ.

**தாத்தா:–** கண்ணா கூப்பிட்டதும் வாடா கண்ணா! நான் உனக்கு ஒரு நல்ல கதைசொ–ல்லப்போகின்றேன்.
**கண்ணன்:–** தாத்தா! உங்கள் காகமும் வடையும் கதை கேட்டு எனக்கு அலுத்துப்போச்சு!

**தாத்தா:–** இல்லை, இன்றைக்கு ஒரு புதியகதை. சிவபெருமான் நரிகளைக் குதிரையாக்கிய கதை.
**கண்ணன்:–** ஓ அப்படியா! தாத்தா, சிவபெருமான் மந்திர வித்தையும் காட்டுவாரோ!

**தாத்தா:–** அவருக்குத் தெரியா வித்தைகளே இல்லை. சிவன்தானே இந்த உலகத்தையே படைத்து, காத்து வருகின்றார்? சரி, அது பிறகு சொல்கின்றேன். சரி இன்று என்ன கிழமை சொல்லு பார்ப்போம்?
**கண்ணன்:–** என்ன தாத்தா இது? இன்று வெள்ளிக்கிழமை. நாங்கள் கோயிலுக்குப் போகும் நாள்.

**தாத்தா:–** கெட்டிக்காரன். அப்போ நானும் நீயும் கோயிலுக்குப் போகத் தயார்செய்வோம். உன் அப்பா வந்ததும் நாங்கள் கோயிலுக்குப் போவோம். சரியாடா கண்ணா? நீ ஓடிப்போய் குளித்துவிட்டு வா. நான் கோயிலுக்குக் கொண்டுபோகும் சாமான்களை எடுத்துவைக்கின்றேன்.

இப்படிச் சொல்லி விட்டுத் தாத்தா ஒரு தட்டில் பழங்கள், பாக்கு, வெற்றிலை, தேங்காய், கற்பூரம், எல்லாவற்றையும் அழகாக அடுக்கி வைக்கிறார். அத்துடன் பட்டுத்துணியையும் மடித்து மேலே வைக்கிறார். எல்லாவற்றையும் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தான் கண்ணன். அவன் மனத்தில் ஒரு கேள்வி எழுந்தது.

**கண்ணன்:–** தாத்தா! நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப்போகின்றேன்.
**தாத்தா:–** ஓ! நீ இன்னும் குளிக்கப்போகமல் இங்கேதான் இருக்கிறாயா? சரி என்ன கேள்வி? சொல்.

**கண்ணன்:–** தாத்தா! நீங்கள் எனக்குச் சொல்வீர்கள், கடவுள்தான் உலகில் எங்களுக்காக எல்லாவற்றையும் படைத்திருக்கிறார். அவரிடம் தான் எல்லாம் இருக்குமே? நாங்கள் எதற்காக அவருக்குப் பழங்கள், பட்டு எல்லாம் எடுத்துக்கொண்டு போகிறோம்? சொல்லுங்கோ!

**தாத்தா:–** ஆகா! நல்ல கேள்வி. சொல்கிறேன் கேள். உன் அப்பாவுக்குப் பிறந்த நாள் வரும்போது நீ பரிசு வாங்கிக் கொடுப்பாய். எனக்கு வாங்கித்தருவாய். உன் அம்மாவுக்கு கொடுப்பாய். உன் நண்பர்களுக்குப் பரிசாக ஏதாவது கொடுப்பாய். ஏன் செய்கிறாய் அவர்களால் எல்லாம் வாங்க முடியும் தானே?

**கண்ணன்:–** ஓ, அதுவா? எனக்கு என் அப்பாமேலே ரொம்பப் பிரியம் தாத்தா. அவர்தானே எனக்கு எல்லாம் வாங்கித் தருகிறார்? அம்மா என் மீது தன் உயிரையே வைத்திருக்கிறார். நீங்களும் எனக்கு எல்லாம் செய்வீர்கள். அது

மட்டுமா? அப்பா, அம்மா எனக்கு அடிக்க வந்தால் தடுப்பதும் நீங்கள் தானே. அதனால் தான் எனக்கு உங்களுக்குப் பரிசுகள் வாங்கித்தரவேண்டும் என்று ஆசை.

**தாத்தா:–** அது போலத்தான் கண்ணா! எங்களுக்கு வேண்டியது எல்லாம் தரும் கடவுளுக்கு நாங்கள் எங்கள் அன்பையும் நன்றியையும் காட்டுவதற்கு இப்படிப்பட்ட பூசைக்கான பொருட்களை எடுத்துச்சென்று அருச்சனை செய்வோம். கடவுளைப் பக்தியாகக் கும்பிட்டால் நாங்கள் கேட்காமலே எங்களுக்கு நல்லதெல்லாம் தருவார்.

**கண்ணன்:–**அப்படியா தாத்தா! கடவுளைக் காணவேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கு. எப்படிக் காணலாம் தாத்தா? எங்கே இருக்கிறார்?

**தாத்தா:–** கடவுள் உலகமெலாம் பரந்து நிறைந்து இருக்கிறார். பாலிலிருந்து தானே வெண்ணெய் (Butter) எடுக்கிறோம்.

**கண்ணன்:–**ஆமாம் தாத்தா! பாலிலிருந்து தான் வெண்ணெய் எடுப்பார்கள்.

**தாத்தா:–**பாலை ஒரு கோப்பையில் ஊற்றிப்பார் அதில் எங்கே வெண்ணெய் இருக்கிறது என்று தெரிகிறதா?

**கண்ணன்:–**இல்லைத் தாத்தா! பாலைக் காய்ச்சி தயிராக்கி அதனைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதாகப் படித்திருக்கிறேன். இப்போது தொழிற்சாலைகளில் வெண்ணெய், தயிர்க்கட்டிகள் செய்வதைப் படத்தில் பாத்த்திருக்கிறேன். இதற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம்?

**தாத்தா:–** சம்பந்தம் இருக்கு கண்ணா! பாலில் வெண்ணெய் கண்ணுக்குத் தெரியாதபடி இருப்பது போலத்தான் கடவுளும் எங்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறார். நாங்கள் அவரைக்காண வேண்டுமென்றால் அவரைப் பக்தியோடு எப்போதும் வணங்கவேண்டும். பாலிலிருந்து வெண்ணெயை எடுக்க எப்படி ஒரு செய்முறை இருக்கிறதோ அதேபோலத்தான் கடவுளைக் காண நாங்கள் முயற்சிக்கவேண்டும். இதை நீ கொஞ்சம் பெரியவனாக வரும்போதுதான் அறியலாம். சரி! கண்ணா! நீ ஓடிப்போய் வெளிக்கிட்டு வா! அப்பா வரும் நேரமாகிறது. கோயிலுக்குப் போவோம்.

**கண்ணன்:–**சரி தாத்தா! இதோ வருகின்றேன்.

*******

## உழையுங்கள் உயருங்கள் !

ஓர் உயர்ந்த மனிதனாக வாழுங்கள் சந்தர்ப்ப அலைகளும், சூழ்நிலைக் கெடுபிடிகளும் உங்களை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்து மேலும் கீழுமாக இழுத்த போதிலும் எண்ணத்திலும் செயலிலும் உயர்ந்தவராக இருங்கள். அதுவே என்றைக்கும் பாதுகாப்பு.

உங்கள் உள்ளத்தில் உள்ள இந்த உயர்வு செயல்களிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கட்டும். நடத்தைகளிலும், வேலைகளிலும் ஒளி வீசட்டும். முகத்தை நீட்டிக்கொண்டு பொறுப்புக்களின் மீது வெறுப்புற்று வாழ்ந்து தொலைப்பது வேதனை தருவதாகும். அதனால் ஒரு பலனுமில்லை.

முணு முணுக்காதீர்கள். இந்த வேலையைச் செய்ய இத்தனை நேரம் சிரமப்பட வேண்டியிருக்கின்றதே எனப் புலம்பாதீர்கள். உங்கள் அன்றாட வேலைகளில் ஒவ்வொரு மணித்துளியிலும் உங்கள் உள்ளத்தை எவ்வளவு தூரம் ஈடுபடுத்திக்கொண்டு மனப்பூர்வமாக உழைத்தீர்கள் எனக்கணக்கிடுங்கள். அதுவே உயர்ந்தவர்களின் அடையாளம்.

உழைப்பு என்பது அன்பின் தூலவடிவம். பிறரிடம் நீங்கள் கொண்டுள்ள அன்பை உயிர்த்துடிப்புடன் வெளிப்படுத்தலே உழைப்பு. அன்றாட வேலைகளை மகிழ்ச்சியின்றி எரிச்சல் பட்டுக்கொண்டு செய்வது கூலி வேலையாகும். உழைப்பு மட்டுமே சாதனைக்கு அழைத்துச்செல்லும். கூலி வேலை அல்ல. அன்பு செறிந்த உழைப்பின் மூலம் சாதனையாளன் ஆகுங்கள்!

மூலம்: சுவாமி சின்மயானந்தர் உரை
தகவல்: துளசி

# The Sensible Doves



There lived a group of doves on a large banyan tree. They lived their happy and care free lives in peace. Every morning they went out of their nests to look for food grains and had their fill when they found some. In the evening, they would return and share their day's experience with each other and then rest for the night.

An old crow, known for his wisdom, also lived there on the tree. Many birds and animals came to it for guidance. One day, a hunter came across the banyan tree and saw the doves there. He decided to lay his snare in the thick outgrowth at the foot of the tree and then capture some of the birds.

The hunter came at dusk and hid his snare at the foot of the tree. He covered the snare with leaves and dry earth. To entice the birds he dispersed some rice grains too.

It was by chance that on the same day the doves' flight in search of food had been in vain. They came back to their home tree-all exhausted and hungry. Just when they approached the tree, a young dove exclaimed, "Look, we have been foraging for food so far away while it is here, so near to us. See these pearly rice grains! They must be so good to taste." "You are right," said the leader of the doves. "Let us peck at these grains and appease our appetite."

After having their fill the doves stretched their wings to fly to their nests on the banyan tree. But alas! They could not move, for their feet were entrapped in the sharp and tight threads of the snare.

"Oh! What a fool I have been," cried the leader. "After years of being an alert leader, today I have led my brethren into a trap. I must seek uncle crow's advice to help us out of this snare."

So the leader called out to the wise crow that lived on another branch of the tree. Hearing the distressed call the crow flew down to the leader and addressed him: "Dear nephew, what have you got into? Surely your alertness must have kept you away from this snare."




"Oh Uncle, we were tired and hungry and the temptation of tasting grains that were so near was too much for us. So we are ensnared," cried the dove.

"Now do as I say" advised the crow. "When the hunter comes at dawn and disentangles the snare from the ground, just fly up in unison. The snare shall be taken with your flight. Fly to the city where my friend, the city mouse, lives with his family. They will chew away the threads of the snare to set you free."



The leader dove understood well and the next day, he acted according to the plan. When the hunter came and unhooked the snare from bushes the doves fluttered their wings together and flew away with the snare. The city mouse chewed away the threads and the doves regained their freedom.



Moral: United we stand, divided we fall.

(Thanks to Readers World)

# CONCEPTS OF HINDUISM

## Is Hinduism diverse or United?

